செ.வெ.எண் 630 நாள் 3-10-07

# செய்தி வெளியீடு

## நான்கு காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் பதக்கங்கள்

## முதல்வர் ஆணை

(1) திருநெல்வேலி மாவட்டம், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் திரு செ.செல்சேம் மாணிக்கராஜ், (2) வேலூர் மாவட்ட, துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு கோ.நாராயணமூர்த்தி, (3) வேலூர் மாவட்ட காவல் ஆய்வாளர் திரு க.கார்த்திகேயன், மற்றும் (4) காஞ்சிபுரம் மாவட்ட உதவி காவல் ஆய்வாளர் திரு.க.சவுந்தரராசன் என்பவர்களுக்கு கள்ளச்சாராய ஒழிப்பு பணியில் பாராட்டத்தக்க பணியாற்றியமைக்காக, 2007 ஆம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் விருது வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. மேற்சொன்ன விருது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2008 குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன் பரிசுத்தொகையாக தலா ரூ.20,000/-மும் அளிக்கப்படும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.